செ.வெ.எண்:35 நாள்:16.04.2018

**கோடை உள்ளிட்ட இயற்கை இடர்பாடுகளிலிருந்து பொதுமக்கள் சிரமங்கள் குறைய சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களில் கூடுதலாக மனுக்கள் பெறப்படும். பொதுமக்கள் பயன்பெற மாவட்ட ஆட்சியர் அவர்கள் தகவல்.**

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.04.2018) நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, வேலைவாய்ப்பு, காவல்துறை நடவடிக்கை, புதிய குடும்ப அட்டை, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 230 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு பரிசீலித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் முகாம் மனுக்கள், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மாவட்ட உயர் அலுவலர்களின் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மக்களைத்தேடி வருவாய்த்துறை அம்மா திட்ட மக்கள் குறை தீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் ஆகியவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:

கோடைகாலம் உள்ளிட் இயற்கை இடர்பாடுகள், பொதுமக்கள் பயண விரயம், கால விரயம், பண விரயம் போன்றவைகளை தடுத்திடும் பொருட்டு வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களில் திங்கட்கிழமை தோறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு உடனடியாக மாவட்ட ஆட்சியரகங்களில் பெறப்படும் மனுக்களுக்கு நிகராக உடனடியாக பரிசீலனை செய்யப்படும். எனவே பொதுமக்கள் தங்கள் பகுதியிலுள்ள வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களில் மனு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், மக்கள் குறைதீர்க்கும் தனித்துணை ஆட்சியர் திரு.பாலசுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.செந்தில், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.பாலசுப்ரமணியம், தேசிய தகவலயில் அலுவலர் திரு.கண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**